ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.49/1993) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி, ஏற்கப்பட்டது.

(ஐ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1993). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1993) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 30-12-1933 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற இந்தச் சட்டம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி, அந்த நிர்வாகத்தை அவர்கள் மூலம் நடத்துவதற்குப் பதிலாக தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டே போவது என்பது எந்த விதத்திலும் பொருத்தமாக இருக்காது.

பிற்பகல் 1.45

திரு. ச. காந்திராஜன் : *மாண்புமிகு (பேரவைத் துணைத் தலைவர்):* மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் பேசுகையில், இந்த நீட்டிப்பு கூடாது, அந்த வகையில் நடப்பது முறையாகாது என்று சொல்கிறார்கள். இதற்கு மாற்று வழி என்ன என்பதையும் உறுப்பினர் அவர்கள் சொல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வே. தம்புசாமி : இதில் சொல்லியிருக்கிறபடி, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, அதனால் காலத்தை நீட்டிக்கிறோம் என்று இருக்கிறது. நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கை விரைவாக நடத்தி, ஜனநாயக முறைப்படி தேர்தல்களை நடத்துவது தான் சரியான மாற்று வழி என்பதைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த வகையிலே விரைவாகத் தேர்தல் நடத்தப் பட வேண்டும். ஆனால் இப்போது இருக்கிற தனி அலுவலர்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியமிக்கப்படுகிறபோது, அவர்கள் எந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்காக நியமிக்கப்படுகிறார்களோ, அந்தச் சங்கத்திலிருந்துதான் அவர்களுக்குச் சம்பளம், படி, அரசு வழங்குகின்ற இதர சலுகைகள் போன்றவற்றை வழங்குகிறார்கள். இன்றையதினம் அந்தச் சங்கங்கள் செயல்படுவதில் நிறைய சங்கடங்கள் இருக்கின்றன. பல சங்கங்கள் நலிந்த நிலையில் இருக்கின்றன. அப்படி நலிந்து கொண்டிருக்கிற சங்கங்களுக்குத் தனி அதிகாரிகள் நியமிப்பது என்பது, மேலும் பொருளாதாரச் சிரமங்களை ஏற்படுத்துகின்ற வகையில், அதிலிருந்து அவர்களுக்குச் சம்பளங்கள், படியோ அல்லது மற்ற சலுகைகளோ வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதன் மூலமே அந்தச் சங்கங்கள் நலிந்து கொண்டு இருக்கின்றன. வேண்டுமென்றே இந்த சங்கங்கள் மீண்டும் நலிவதற்காக இப்படிச் தனி அதிகாரிகளை நியமிப்பது எந்த வகையிலும் நியாயமானதல்ல. அந்தச் சங்கத்தின் செயலாலர்களோ, அல்லது அதைக் கண்காணிக்கக் கூடிய அதிகாரிகளோ நேரடியாக அந்தச் சங்கங்களைப் பார்த்துக் கொள்ளலாம். இப்படித் தனி அதிகாரிகளை நியமிக்கிறபோது, அந்தச்

சங்கங்களுக்கு விற்பனைப் பொருள்கள் வாங்குகிறபோது, அந்தத் தனி அதிகாரிகள் எங்கே வாங்கச் சொல்கிறார்களே அங்கே போய் வாங்க வேண்டியிருக்கிறது. அவர்கள் குறிப்பிடுகிற கடையில்தான் கொள்முதல் செய்யவேண்டியிருக்கிறது. அதன் விளைவாக கொள்முதலுக்கும் விற்பனைக்கும் சம்பந்தம் இல்லாத நிலைமை ஏற்பட்டு, வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு இப்படிபட்ட சங்கங்கள் மேலும் நலிவதற்கு அடிப்படையாக இருப்பது இந்தத் தனி அதிகாரிகள். ஆகவே இந்தத் தனி அதிகாரிகளை நியமிக்காமல், இப்போது கோர்ட்டில் இருக்கிற வழக்குகளை ரத்து செய்து உடனடியாக சங்கங்களுக்கு முறைப்படி தேர்தல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோர்ட்டில் இருக்கும் வழக்கை ரத்து செய்கிற அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. வே. தம்புசாமி : அரசு முயற்சி செய்து, துரிதப்படுத்தி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்லுங்கள்.

திரு. வே. தம்புசாமி : அரசு துரிதப்படுத்தி அந்த வழக்கை நடத்தி, ஜனநாயக முறைப்படித் தேர்தலை நடத்துவதுதான் சாத்தியம் என்று கருதுகிறேன். தேர்தல் நடத்தவேண்டும். ஆகவே இந்தச் சட்டம் அவசியம் இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு துரிதமாகச் செயல்படுகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள், அதில் பார்ட்டியாக சேர்ந்துகொண்டு, தனி வக்கீல் வைத்து இன்னும் துரிதப்படுத்தலாமே. அதற்கு அவர் என்ன சொல்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வே. தம்புசாமி: சர்க்கார் எடுத்து முடிக்கவேண்டுமே தவிர, சொல்கிறவர்கள் யாரும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோவி. எஸ். மோகனன்.

திரு. கோவி. எஸ். மோகனன்: மாண்புகள் ஆயிரம் மிகுதியாகப் பெற்றிருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதி வெறி தணிக என்றார், சமய வெறி தணிக என்றார், பெண்கள் எல்லாம் நல்லுரிமை அடைக என்றார், எல்லோரும் சகோதரர்போல் அமைக என்றார். எமை அகத்தும் புறத்தும் திருத்துவதற்கு எம்பெருமான் சொன்னதற்கெல்லாம் இமயமலை இல்லையென எண்ணியதைப்போல் எண்ணினோம், பின்னர்

தெளிந்தோம். பால்போன்றார் குழந்தைகட்கு, பசும்பாற்கட்டித் தயிர் போன்றார் பசித்தவர்க்கு, செந்தமிழ் நாட்டில் பிறந்தவர்க்கெல்லாம் உயிர் போன்றார், இங்கு வந்தார் இவர், யாம் கண்ட பெருமைக்கோர் எல்லை இல்லை என்று போற்றுகின்ற அளவுக்கு, the poetic talent of Indian Nightingale Sarojini Naidu; the administrative capacity of Queen Victoria; iron will of Margaret Thatcher; boldness of Thanthai Periyar; cleverness of perarignar Anna; philanthrophic qualities of Puratchi Thalaivar Dr. M.G.R., are rolled in one,that is called our Idhaya Deivam, Dynamic Leader, Divine Leader, Dr.Puratchi Thalaivi என்று சொல்கிற அளவுக்கு, கவிக்குயில் சரோஜினி நாயுடுவினுடைய கவிதாற்றலையும், விக்டோரியா மகாராணியுடைய நிர்வாகப் புலமையையும், மார்கரெட் தாட்சருடைய துணிவையும், தந்தை பெரியாருடைய தின்மையையும், பேரறிஞர் அண்ணாவுடைய அறிவாற்றலையும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய வாரி வழங்குகிற தன்மையையும் ஒன்றாகப் பெற்றிருக்கின்ற, ஓருருவாகப் பெற்றிருக்கின்ற நம்முடைய இதயவானில் உலா வந்து கொண்டிருக்கின்ற நம்முடைய கவின் குஞ்சலத்துத் தந்தத்தில் அஞ்சுகத்தைத் தேக்கிவைத்த தமிழக பூமியினுடைய தவப்பயனாக இருக்கின்ற புரட்சித்தலைவி அவர்களுக்கு, 69 விழுக்காடு மிகப்பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனிச்சட்டம், திட்டம் கொண்டு வந்ததன் மூலமாக அந்த இதயதெய்வத்திற்கு, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த, ஒரு ஏழை எளிய சாதாரண சாமான்ய--பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுவார்களே, அன்றாடங்காய்ச்சிகள், அன்னக்காவடிகள், திக்கற்றவர்கள், தீனர்கள் என்று சொல்வார்களே—அப்படிப்பட்ட ஒரு குடும்பத்திலே பிறந்த நான் ஆயிரம் ஆயிரம் கோடி மலர்களை என்னுடைய அன்னையினுடைய புரட்சித் தலைவியினுடைய பாத மலர்களிலே காணிக்கையாக்கி, இங்கே கொண்டு வந்திருக்கின்ற தனி அலுவலர்கள் நீட்டிப்பு ஆய்விலே என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 1.50

இங்கே பல பேர் இந்த தனி அலுவலர்கள் நீட்டிப்பிலே குறையை, குற்றத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். நான் இங்கே ஒன்றைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருவதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் நம்முடைய பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியினுடைய தாசனாக இருந்த பாரதிதாசன் சொல்லுவார்கள்: அதைப்போல,

“வெற்றி கூறுமின் வெண்சங்கு ஊதுமின்
கற்றவராலே உலகு காப்புற்றது
இற்றைநாள் வரையிலும் அறமிலா மறவர்
குற்றமே தமது மகுடமாகக் கொண்டோர்
பற்றை அரசா பழிபடு படையுடன்
மற்றை மனிதரை அடிமைப்படுத்தலை
முற்றிய அறிவின் முறையன்று என்று எண்ணுவார்
சொற்றை நீதி தொகுத்து வைத்திருந்தார்.”

என்று சொல்வார்கள். ஆக ஒரு சொற்றை நீதியை அறமிலாத மறவர்கள், குற்றத்தையே தம்முடைய மகுடமாகக் கொண்டோர்கள், தன்னுடைய கட்சியைத் சேர்ந்தவர்கள் வரவேண்டும்; அதற்கு ஜனநாயகம் தேவையில்லை; அதிகாரம் இருக்கிறது, ஆட்சி இருக்கிறது, சட்டத்தை எப்படி வேண்டுமானாலும் இயற்றி, அவர்கள் நிர்வாகத்துக்கு வரவேண்டும் என்பதற்காக, கூட்டுறவுத் துறையிலே அவர்கள் ஓட்டுப் போடவேண்டிய அவசியம் இல்லை, ஓட்டுப் போட்டாலும் ஓட்டை முன்னாலேயே குத்திக்கொள்ளலாம், அதிகாரிகளை அப்படி அமைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலைமை வந்ததை மாற்றுகின்ற வகையிலேதான் நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சரும், ஓங்கு புகழ் முதலமைச்சர், நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் சாமானியர்கள் வரவேண்டும், சாதாரணமானவர்கள் வரவேண்டும், கூட்டுறவுத்துறை ஆக்கத்தை, ஊக்கத்தைப் புரிந்துகொண்டு ஏழை எளியவர்கள், 'சேரியில் வாழ்கிற செல் அரித்த சித்திரங்கள்' என்று காந்தியடிகள் சொல்வார்களே அப்படிப்பட்டவர்கள், தரித்திர நாராயணர்கள் இடம் பெற வேண்டும் என்பதற்காக, பாரதிதாசன்

‘ நீரோடை நிலங்கிழிக்க நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாகப், பெருவிலங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப், பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேரப் பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார் ? அழகு நகருண் டாக்கி;
சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள் ?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை ?

பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின்மூச்சு ?
அக்கால உலகிருட்டைத் தலைகீ ழாக்கி
அழகியதாய் வசதியாய்ச் செய்துதந்தார் !
இக்கால நால்வருணம் அன்றி ருந்தால்
இருக்கட்டும் முன்னேற்றம் ஆவ தன்றி
புக்கபயன் உண்டாமோ ?"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய இப்படிப்பட்ட பேச்சுக்களையெல்லாம் வரவு செலவுத் திட்டத்தினுடைய பொது விவாதத்தின்போதும், மானியக் கோரிக்கைகளின்போதும் வைத்துக்கொள்வலாம் என்று கூறிக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தச் சட்டத் திருத்தத்திலே இப்படிப் பேசினாலே, இன்னும் 7 சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டி இருக்கிற காரணத்தினால் ஆக, பின்னால் வைத்துக்கொள்ளலாம்; இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில் மட்டும் கூறி முடிப்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் புலமையை எல்லாம் இந்தச் சட்டத்துக்குத் தொடர்புடையதாகக் கொண்டுவருகிற திறமை இங்கு பாராட்டத்தக்கதுதான். இருந்தாலும் 1.53 ஆகிவிட்டது. மீதிக் கவிதைகளை, பேரவை முன்னவர் சொன்னதுமாதிரி அந்த நேரங்களில் வைத்துக்கொள்ளலாம்.

திரு. கோவி. எஸ். மோகனன் : அப்படிப்பட்ட சமானியர்கள் இடம் பெறுகிற வகையிலேதான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த தனி அலுவலர்களுடைய நீட்டிப்பை இடைக்கால ஏற்பாடாக செய்து இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இடம் பெறவேண்டும் என்பதற்காக தக்க சட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் நீடித்து இருக்கிற இந்தத் தருணத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். பல்வேறு இடங்களிலே நம்முடைய கூட்டுறவுத் துறையினுடைய தலைமையிலே இயங்குகிற அந்த நியாயவிலைக் கடைகளிலே 2000 அட்டைகள், 2500 அட்டைகள் உள்ள கடைகள் எல்லாம் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே, அந்தக் கடைகளை இரண்டாக, மூன்றாகப் பிரித்து தனித் தனியாக ஏற்படுத்தித் தந்தால் மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும் என்பதை இங்கே வலியுறுத்துகிற வகையிலே குறிப்பாக கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு தெளிவாகத் தெரியும்; நந்தியாலம் என்கிற இடத்திலே தலைகிராமத்திலே, அங்கே ஏறத்தாழ 8, 9 கிலோ மீட்டர் நடந்து செல்கிற நிலையிலே அங்கே நியாயவிலைக்கடை

இல்லாமல்—இப்போதுகூட இருக்கிறது; அதையும், அதைப்போல் சிப்காட் பகுதியிலே 4 ஆயிரம் அட்டைகள் உள்ள நியாயவிலைக்கடை இருக்கிறது ஆக அந்தக் கடைகளைப் போன்று பல்வேறு கிராமங்கள் எங்கள் இராணிப்பேட்டை தொகுதியிலே இருக்கின்றன; அவற்றைப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இராணிப்பேட்டையிலே டவுன் பேங்க் என்று சொல்கிற அதனுடைய கிளையை வாலாஜாபேட்டையிலேயே ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதோடு கம்பன் அவர்கள் சொல்வார்களே

பிற்பகல் 1.55

'விடம் கொண்ட மீனைப் போலும்
வெந்தலை மெழுகு போலும்
படம் கொண்ட பாந்தன்வாயில் பற்றிய தேரைப் போலும்
கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று

அதைப்போல சாகா வரம், போகா உயிர், வேகா உடல் பெற்ற இராவணன், கடனைப் பெற்றவனைப் போல கலங்கினான் கடைசி நேரத்தில் என்று சொல்வார்கள். அதைப்போல தவிக்கும் விவசாயிகளுடைய கடனை சற்று அவர்களுடைய விவசாய அறுவடை முடிகிற வரையில், பிப்ரவரி 15 ஆம் நாள் வரையில் வசூல் செய்வதை தயவுசெய்து தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த இதய தெய்வம், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குக், குறிப்பாக விவிலியன் நூலில் சொல்வார்களே " I am a Good Shepherd ; I Know my sheep " 'ஒரு நல்ல ஆடு, எனக்கு நன்றாகத் தெரியும்' என்று இயேசுநாதர் சொன்னாரே, அதைப்போல ஒரு தொண்டனாக இருந்த எனக்கு இந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பைத் தந்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய திருப்பாதங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றி மலர்களை காணிக்கையாக்கி, இச்சட்ட முன்வடிவை ஆதரித்து, என் உரை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை மேலும் ஆறு திங்களுக்கு நீட்டிக்கிற இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் எதிர்க்கிறேன். சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தைத் தவிர, தமிழகத்திலே இருக்கிற பல்வேறு அமைப்புகளுடைய சல்லிவேர்கள் இன்றையதினம் அரிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு அமைப்புகளுக்குத் தலைவர்கள், உறுப்பினர்கள் இல்லையென்று சொன்னால், இந்தியாவில் நம்முடைய தமிழ்நாட்டில் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிற இந்தச் கூட்டுறவு அமைப்புகள்

நாளடைவில் பலகீனப்பட்டுவிடும். எனக்கு முன்னாலே சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். துணைச் சபாநாயகர் அவர்களும் சொன்னார். கோர்ட்டிலே இருக்கிற தடையை நீக்க நீங்கள் தயார் என்று சொன்னால் தேர்தலை நடத்துவோம் என்று சொன்னார்கள். ஒரு ஜனநாயகப்பூர்வமாக இந்தத் தேர்தல் நடைபெற தமிழக அரசு அறிவித்திருந்தால், இந்த தேர்தல் குறிப்பிட்ட தேதியில் நடந்து முடிந்திருக்கும். ஆனால் இருக்கிற கூட்டுறவு அமைப்புகளை கலைத்து நீங்கள் ஆறு மாதத்திற்குள்ளாக தேர்தலை நடத்துவோம் என்று சொல்லிவிட்டு, மேலும் மேலும் ஆறு திங்களை நீட்டிப்பது என்பது சரியல்ல. ஆகவே ஆறு திங்கள் என்பதை சட்ட முன்வடிவில் மூன்று திங்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மக்களிடம் நேரடியாகத் தொடர்பாக இருப்பது இந்தக் கூட்டுறவு அமைப்புகள். இன்றைக்கு மாநிலத்தில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி சீராக நிர்ணயிக்கிற ஸ்தாபனம் எதுவென்று சொன்னால் அது கூட்டுறவு அமைப்புகள்தான். எல்லாப் பொருள்களும் கூட்டுறவு அமைப்புகளில் நியாயமாக விலை வைத்து விற்பதால்தான் தனி வியாபாரிகள் அதை விட உயர்த்த முடியாத நிலை இருக்கிறது. இதை நீங்கள் ஆறுமாதம், ஆறுமாதம் என்று சொல்லி நீட்டிப்பது சரியல்ல. அதை மூன்று மாதங்களாகக் குறைத்து தேர்தலை நடத்துவதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர்களுடைய கால அளவை ஆறு திங்களுக்கு நீட்டிக்கிற இந்தச் சட்ட முன்வடிவு, இந்த அவையில் கொண்டு வருவது இது மூன்றாவது முறை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தலை நடத்தக் கூடாது என்பதல்ல இந்த அரசினுடைய கருத்து, எண்ணம். இந்த அரசைப் பொறுத்தவரையில் அது கூட்டுறவுத் துறையின் தேர்தல் ஆனாலும் சரி, நாடாளுமன்றத் தேர்தல் ஆனாலும் சரி, அல்லது சட்டமன்றத் தேர்தல் ஆனாலும் சரி, அது எந்தத் தேர்தல் ஆனாலும், புரட்சித்தலைவி அவர்கள் எதிரிகளை அந்தக் களத்தில் பந்தாடுகிற திறமையைப் பெற்றவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு அவருக்கு பின்னாலே இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர் பட்டாளமும் இருக்கிறது. நான் ஏற்கனவே இதே மன்றத்தில் சொல்லி இருக்கிறேன். புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் அது எந்தத் தேர்தலாக இருந்தாலும், புரட்சித்தலைவிக்கு அது செந்தேன், மற்றவர்களுக்கு அது செந்தேள் என்று சொல்லி இருக்கிறேன்.

இந்த நீட்டிப்பு ஆறு மாதங்களுக்கு ஏன் கேட்கிறோம் என்றால்,அந்த ஆறு மாத காலத்திற்குள்ளாகவே சென்னை உயர்நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கானாலும் சரி, உச்ச நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கானாலும் சரி, அது விசாரணைக்கு வந்து முடிவு பெறும் என்ற எண்ணத்தில்தான் ஆறு மாதங்கள் கேட்டிருக்கிறோம்.

பிற்பகல் 2.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: திரு. பழனிசாமி அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள், இதை ஏன் 3 மாதமாக மாற்றக்கூடாது என்று. 6 மாத காலத்திற்கு நீட்டித்துவிட்டு, அதற்கு இடையில் நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை அளிக்குமானால், இந்த 6 மாத காலத்திற்குள்ளாகவே அந்தச் தேர்தலை நடத்த முடியும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தனி அலுவலர்களுடைய நீட்டிப்பு அவசியம் தேவைப்படுகிறது. அது சட்டத்திலே ஏற்கனவே இருந்து, இப்போது நீட்டிப்புக் கேட்கப்படுகிற கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சங்கங்கள் எந்த அளவிற்கு பணியாற்றுகின்றன என்பதை அருமை உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சில அலுவலர்கள் எந்தக் கடையிலே பொருட்களை வாங்கவேண்டும் என்று சொல்கிறார்களோ, அந்தக் கடையிலேதான் போய் வாங்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப் பட்ட நிலைமை இன்றையதினம் தமிழகத்திலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே கிடையாது. அதற்கு என்று தனியாக சென்ட்ரல் ஜாயின்ட் பர்ச்சேஸ் கமிட்டி என்கிற ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு எங்கே பொருட்களை வாங்கவேண்டும் என்று சொல்கிறதோ, அங்கேதான் வாங்க முடியும்.

கூட்டுறவுத் துறையின் மீது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்கின்ற முகத்தான், சில மணித்துளிகளுக்கு முன்னால், முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த ஆணையின்படி, இன்றையதினம் பொது வினியோகத் துறையிலே இருப்பவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே அவர்கள் 500 ரூபாய் மாதச் சம்பளம் பெற்றதை 600 ரூபாயாக மாற்றி இன்றையதினம் ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த 600 ரூபாய் 1-4-1994 -லிலிருந்து 750 ரூபாயாக தரப்படும் என்கிற ஆணையை புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எடுத்துச் சொல்லி, கூட்டுறவுத் துறையின் மீது

புரட்சித் தலைவி அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு 1. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான்

" In Clause 1, *for* ' Third Amendment *Act*, 1993', *substitute* 'Amendment Act, 1994'. " என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.43/1993) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

(ஓ) நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரி (திருத்தம் மற்றும் தனி வகைமுறை) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித்தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரி (திருத்தம் மற்றும் தனி வகை முறை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 48/1993). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.